**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 115/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.9 |
| Name : | சி. பிரேம்குமார்(காவல் ஆய்வாளர், மீன்சுருட்டி காவல் நிலையம், அரியலூர் மாவட்டம்) |
| Father's/Husband Name: | சீனிவாசன் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 42 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.07.2024

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – மனோஜ்குமார் 2ம் எதிரி –ராஜேஸ் ஆஜர் இல்லை). (அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1). (i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மீன்சுருட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கை.களத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது கடந்த 09.09.2017-ம் தேதி 23.00 மணிக்கு ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமத்தை சேர்ந்த சாந்தி (வயது 35/2017) க/பெ. ரெங்கநாதன் என்பவர் தற்பொழுது பெருநிலா கிராமம், பெரமபலூர் மாவட்டத்தில், முருகேசன் என்பவரது காட்டுக்கொட்டகையில் தற்காலிகமாக குடிசை அமைத்து ஆடுமேய்க்கும் தொழில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த நபர் நிலையம் ஆஜராகி எழுத்துபூர்வமாக கொடுத்த புகாரினை பெற்று அதன் அடிப்படையில் கை.களத்தூர் காவல் நிலைய குற்ற

417/2017 இ.த.ச 392 பிரிவு படி வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் அச்சு முதல் தகவல் அறிக்கை அவ்வாறு நான் பதிவு செய்தது தான். (**அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

(ii) பின்னிட்டு அசல் புகாரையும், அசல் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தம்பட்ட நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிக்கி அளித்தும், மற்றொரு நகலை நிலைய பொறுப்பில் வைத்தும் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.09.2017 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவயிடமான பெருநிலா கிராமத்தில் உள்ள காட்டுக்கொட்டகைக்கு சென்று அங்கு வைத்து சாட்சிகள் ஜலாலுதீன் மற்றும் குணசேரகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அவ்வாறு நான் தயார் செய்தது தான். (**அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). . என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் அவ்வாறு நான் தயார் செய்தது தான். ( **அது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னிட்டு சாட்சிகள் சாந்தி, ரெங்கநாதன், முருகேசன் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு பணிமாறுதல் ஆனாதல் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக (பொறுப்பு) ஆய்வாளர் திரு.ராஜ்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் ராஜ்குமார், சிவசுப்ரமணியன், மகாலெட்சுமி ஆகியோரை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. i) சம்பவம்நடந்ததாக சொல்லப்படும் தேதி 17.08.2017 ம் தேதி என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்ட தேதி 09.09.2017 ம் தேதி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நிகல்நிலை புகார்தாரரிடம் FIR நகல் கொடுக்கப்பட்டு கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த வகை வாகனத்தை பயன்படுத்தினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிள் என்று குறிப்பிட்டுள்ளார். பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நகையை பறித்து சென்ற நபர்கள் என்ன வகை நிற உடை அணிந்திருந்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பறிக்கப்பட்டதாக சொல்லப்படும் தாலியுடன் கூடிய தங்க செயின்

எந்த வகையை(டிசைன்) சார்ந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாலி மற்றும் செயின் தனிதனியே எவ்வளவு பவுன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சி குணசேகரன் நீதிமன்ற சாட்சியத்தில் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொல்லியிருந்தால் அது தவறாகும். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் மோட்டார் சைக்கிளின் நிறத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.
Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.